**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.172/2022 உ/இ M.C.O.P.No.174/2022**

2025 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வி . பிரியங்கா (எ.ம.சா.1) | தொழில் | : தட்டச்சர் |
| த/பெ. | : திரு. சேகர் | வயது | : 28 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : பழனி | இனம் | : பெண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 25.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வரப்பெற்ற சாட்சிய அழைப்பாணையின் அடிப்படையில் வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு சாட்சி சொல்ல அதிகாரம் வழங்கியுள்ளார். TN 57 AR 9714 என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று 19.06.2019 முதல் 18.06.2020 வரை இருந்தது. விபத்து தேதியான 13.07.2022 அன்று அந்த வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை. மேற்படி வாகனத்திற்கு எங்கள் அலுவலகத்தில்தான் தகுதிச்சான்று எடுக்கவேண்டும். தகுதிச்சான்று இல்லாமல் பொதுச்சாலையில் இயக்குவது மோட்டார் வாகனச் சட்டத்தின்படி குற்றம் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய சான்று எ.ம.சா.ஆ.1. மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்று குறித்த எடுகுறிப்பு எ.ம.சா.ஆ.2.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

எனக்கு வாகனத்தை தணிக்கை செய்யும் அதிகாரம் இல்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை யார் நேரடியாக ஆய்வு செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எ.ம.சா.ஆ.2 ல் எந்த தேதியில் மேற்படி எடுகுறிப்பு எடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி ஆவணத்தை இன்று பிரிண்ட் அவுட் எடுத்து நான் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கையொப்பம் பெற்றுள்ளேன். தகுதிச்சான்று இல்லாத வாகனத்திற்கு அபராதம் செலுத்தி புதிதாக தகுதிச்சான்று பெறமுடியும் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு அபராதம் செலுத்தி புதிதாக தகுதிச்சான்று பெறப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**<u>மறு விசாரணை :-</u>**

எங்கள் ஆவணங்களின்படி இன்றைய தேதி வரை மேற்படி வாகனத்திற்கு 2020ம் ஆண்டுக்குப்பிறகு தகுதிச்சான்று புதுப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.25 19:39:40 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.